[1972 ஆகஸ்டு 9]

கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது ஓரளவுக்கு வெற்றி பெறுமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய யோசனைகள் வெற்றி பெற முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. SWAMINATHAN : May I know whether there is any procedure for checking the kitchens and vessels used for cooking these midday meals, since we are hearing of food poisoning cases very often, that too recently from Hosur ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புதிதாக அமைக்கப்படுகிற மையக் கூடங்களில் அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்பட வழியில்லை. ஏனென்றால் எவர்சில்வர் பாத்திரங்களை வைத்து தூய்மையான உணவை உருவாக்குவதற்கான முறையில் அந்தப் பாத்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட ஓரிரண்டு இடங்களில் தவறு ஏற்பட்டு விடுகிறது. அதற்கு முன்னேற்பாடாக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

Operation Theatres.

* 5. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether it is a fact that two Operation Theatres of Thanjavur Medical College Hospital have remained closed for a long time; and

(*b*) if so, the reasons therefor ?

அறுவை சிகிச்சை நிலையங்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சை நிலையங்களில் (Operation Theatres) இரண்டு நீண்ட காலமாக மூடப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இந்த மருத்துவமனையில் டிடேனஸ் காரணமாக இரண்டு அறுவை சிகிச்சை அரங்கங்கள் சிறிது காலம் மூடப்பட்டிருந்தன. இவ்வரங்கங்கள் 8—3—1972 முதல் தொடர்ந்து இயங்குகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, எவ்வளவு காலமாக மூடப் பட்டுக் கிடந்தன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 26—1—1971, 16—1—1971 ஆகிய தேதிகள் முதல் இரண்டு அரங்கங்கள் மூடப்பட்டிருந்தன. இதில் பி.டபிளியு.டி. பழுது பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டு, அந்த பழுது பார்க்கவேண்டிய கடமை முடிந்து மறுபடியும் அப்படிப்பட்ட டிடேனஸ் பேசிலி (நோய்க்கிருமி) ஏற்படுவதற்கு இடம் இல்லையென்று தீர்மானித்து 8—3—1972 முதல் அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மொத்தம் எத்தனை அறுவைக் கூடங்கள் உள்ளன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கே நான்கு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்கள் இருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கு மேலாக இதன் வேலைகள் நடந்திருக்கின்றன. இவ்வளவு நீண்ட காலம் தேவையா என்பதையும் இவ்வளவு காலதாமதம் ஏன் ஏற்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலில் இந்த நோய் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து காண ஒரு மாத, இரண்டு மாத காலம் ஆகிவிட்டது. ஆராய்ச்சிக்குப் பின்னர் வழக்கம்போல் ஒரு அறுவை சிகிச்சை அரங்கைப் பழுதுபார்ப்பது என்றால், பி.டபிள்யு.டி. இலாகா பணி தேவையே இருக்காது. அப்படி நிறைவேற்றலாம் என்ற முயற்சி எடுக்கப்பட்டு, அதற்குப் பின்னர் சிவில் ஒர்க்ஸ் நடைபெற்றாக வேண்டுமென்று தீர்மானம் செய்ததால் தாமதம் ஏற்பட்டது. இனியாவது டிடேனஸ் வராமலிருந்தால் போதும் என்ற அடிப்படையில் எட்டு மாத காலம் இடையே தள்ளி வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும், மற்ற அரங்கங்கள் பயன்பட்டதால் மருத்துவப் பணிக்குக் குந்தகம் ஏற்படவில்லை.

Food Adulteration Cases.

* 6. *Q.*—Thiru M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of Food Adulteration cases that have been detected in Madras City during 1971 monthwar ?